**தலைப்பு 434 – களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வசதிகள், இயந்திர படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையால் முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடு எழவில்லை.

## 1.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இரஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வ மானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொண்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இராஜாங்க அமைச்சின் ரூபா 2,472,680,000 ஆன 18 செலவன விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடுகளின் சேமிப்பு 39 சதவீதம் அதாவது ரூபா 976,062,195 ஆக இருந்தது. அச்சேமிப்பு செலவின விடயத்திற்கான தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்ப தவறியமை, சம்பளம் மற்றும் ஊதியம் உள்ளிட்ட ஊழியர்களின் செலவுகள் சேமிக்கப்பட்டமை, 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் கட்டளையிடப்பட்ட பொருட்கள் 2021 சனவரி மாதத்தில் கிடைத்தமை, தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கையேற்பதற்குரிய செலவின விடயத்தில் 99% ஏற்பாடு சேமிக்கப்பட்டமை என்பன காரணமாகும். உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி சம்பந்தமாக யாழ் குடாநாடு மற்றும் அதனுடன் இணைந்த தீவுகளில் உள்ள ஜெட்டி அபிவிருத்திக்கான செலவின விடய ஒதுக்கீட்டில் 49% குறித்த கட்டிடங்களை மேம்படுத்தல் வேலைகள் கொவிட் அனர்த்தம் காரணமாக மேற்கொள்ளப் படாமையால் சேமிக்கப்பட்டது. | நி.பி 50 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) 11 செலவின விடயங் களுக்காக தேவையான ரூபா 70,390,000 ஆன மொத்த நிதிஏற்பாடுகளும் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை | 2020 ஆகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டமையால் சீருடைக்கான செலவினம் செய்யப்படாமை, எவ்வித இயந்திர உபகரணங்களுக்குரிய திருத்தவேலைகள் ஏற்படாமை மற்றும் அமைச்சிற்காக நிரந்தர | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடமொன்று இல்லாமையால் குறித்த செலவின விடயங்களில் 100% நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | |
| (இ) | திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2017 ஆண்டில் வெளிநாட்டு மானியங்களின் கீழ் கிடைத்த 1000 மில்லியன் ஜப்பான் யென் (ரூபா 1671 மில்லியன்) தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கடன்தொகைக்குரிய நடப்பாண்டின் நிதிஏற்பாடு சரியாக கணக்கிட முடியுமாக இருக்கையில் ரூபா 2,447,120,000 ஆன மிகை மதிப்படு செய்யப்பட்டமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 963,599,578 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | இந்த செலவினத் தலைப்பிற்கு 2020 ஆம் ஆண்டில் இடைக்காலக் கணக்குகளின் கீழ் கூடுதலான நிதிஏற்பாடுகள் செய்யப்பட்டதன் காரணமாக இந்நிதி ஏற்பாடுகளை நிறுத்தி வைக்குமாறு 2020.12.21 ஆந் திகதிய PAAD/ACC/11/ Trincomalee ஆம் இலக்க எனது கடிதம் மூலம் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார். | - மேற்படி - |
| (இ) | 2017 ஏப்ரல் 25 ஆந் திகதிய JC/JICA/G / DF: 02 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் மேற்படி (இ) இல் குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், ஆனால் 2017 ஆம் ஆண்டில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டச் செலவு ரூபா 80,765,238 (ஜப்பானிய யென் 48,333,476 x1.671), ஆக இருந்த போதும் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 740 மில்லியனுக்கு எதிராக அச்செலவினம் கணக்கீடு செய்யப்பட வில்லை. | பதிலளிக்கப்படவில்லை | ஆண்டில் செலவிடப்படும் செலவினங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இச்செயற்றிட்டத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட Mitsubishi Corporation இற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 42,276,300 ஆன (ஜப்பான் யென் 25,300,000x1.671) மற்றும் ஜப்பானின் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த Sirius Corporation கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 543,075 (ஜப்பான் யென் 325,000x1.671) உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | செலவினத்தை உறுதிப்படுத்து வதற்காக போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை |

## 2.2 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 02 மாதங்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் உத்தியோகத்தரொருவருக்கு மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த கடன் மீதியான ரூபா 179,150 தொகை இதுவரை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 யூன் மாதத்தில் வடமேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,034,908 ஆன பொறுப்புக்கள் 2021 சனவரி மற்றும் பெப்ரவரி மாதத்தின் போது தீர்வு செய்யப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்களாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றினைத் தயாரிப்பதற்கு உள்ளக நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாது | நிதிப் பிரமாணம் 94 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மதிபீட்டில் நிதிஏற்பாடு இல்லாமல் பொறுப்புகளுக்கு உட்படக்கூடாது. |
| (ஆ) | 02 செயற் திட்டங்களுக்குரிய 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 செலவின விடயங்களில் சேமப்பினை மிகைத்த ரூபா 994,288 ஆன பொறுப்புக்களுக்கு மேற் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த அமைச்சு 2020 ஆகஸ்ட் மாதம் உருவாக்கப் பட்டமையால் மிக அத்தியவசிய செலவினங் களுக்காக அவ்வாறு பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெவ்வேறு அரச நிறுவனங்களுக்குரிய 9 வாகனங்கள இந்த இராஜாங்க அமைச்சின் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந் போதும் அவ்வாகனங்களின் உரித்து இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது இவ்வாகனங்கள் இவ்வமைச்சிற்கு கையேற்பு இடம்பெறாமையால் அவ்வாறு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படவில்லை. அந்த 02 வாகனங்களை இத்திணைக்களத்திற்கு | 2017 திசெம்பர் 13 ஆந் திகதிய 259/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 05 வாகனங்கள் தற்காலிக அடிப்படையில் இவ்வமைச்சின் பயன்பாட்டிற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் உரித்து கையேற்றல் இடம்பெறவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன். | வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 52 ஆக இருந்ததுடன் அத்திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 46 ஆக இருந்தது. | பொது நிர்வாக அமைச்சிடம் கோரப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டின் போது வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை | அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு பதவியணியினர் நியமிக்கப்பட வேண்டும். |